**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**STC.NO- 264/2024**

**Dated :30.01.2026**

**Deposition of witness for : D.W.1**

**Cross Examination of DW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜாபர் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | ஜக்கரியா | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் தொழில் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>புகார் தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் மைதீனுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அந்த அழைப்பாணையில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அழைப்பாணை தற்போது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை . இந்த வழக்கு யாரால் யார் மீது எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மைதீன் சார் மீது, மைதீன் வாங்கிய இடத்திற்காக ராதா வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த இடத்தின் சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடம் எந்த தேதியில், விற்பனை செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும், 09.11.2010 ஆம் தேதி விற்பனை செய்யப்பட்டது. எதிரி முகமது மைதீன் எத்தனை வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேல் செய்து வருகிறார்.

2) 2016 ஆம் ஆண்டிலிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறாரா என்றால் நான் 2009 ஆம் ஆண்டில் அவரிடம் வேலைக்கு சேர்ந்தேன். அப்போதிலிருந்து அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் உறவினர்கள் என்றால் சரிதான். நான் எதிரியிடம் ரியல் எஸ்டேட் புரோக்கர் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி முதல் முதலில் என்ன பெயரில் ரியல் எஸ்டேட் தொழில் ஆரம்பித்தார் என்றால் வின்லேண்ட் புரோமோட்டர்ஸ் என்ற பெயரில் ஆரம்பித்தார். அது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமா என்றால் ஆமாம். அது எந்த தேதியில் அங்கீகரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரருக்கும்

எதிரிக்கும் எந்த வருடம் பழக்கம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2010 ஆம் ஆண்டு புகார்தாரரிடம் இருந்து எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தினை நான் எதிரிக்கு வாங்கிக்கொடுத்தேன் என்றால் 28 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்தினை வாங்கிக்கொடுத்தேன். 28 செண்ட் விஸ்தீரணம் சொத்தினை செண்ட் கணக்கில் வாங்கப்பட்டதா அல்லது சதுரடி கணக்கில் வாங்கப்பட்டதா என்றால் செண்ட் ஒரு செண்ட் ரூ.33,500/- என்ற விலைக்கு வாங்கப்பட்டது.

3) புகார்தாரரும் எதிரியும் பங்குதாரராக இருந்து, புரோமோட்டர்ஸ் நிறுவனத்தை நடத்தி வந்தர்கள் என்றால் சரிதான். எதிரியும் புகார்தாரரும் பங்குதாரராக இருந்து, மகாத்மா காந்தி என்ற நகரை உருவாக்கி புரோமோட் செய்தார் என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரரிடம் கிரையம் பெற்ற இடத்தை மகாத்மா காந்தி நகர் என உருவாக்கி விற்பனை செய்தார். அதில், சில மனைகளை புகார்தாரரின் கணவர் விற்பனை செய்து கொடுத்தார். அவ்வாறு புகார்தாரரின் கணவர் விற்பனை செய்துகொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவர் ஆட்களை கூட்டி வந்து விற்பனை செய்து கொடுத்தார். அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. அவ்வாறு புகார்தாரரின் கணவர் விற்பனை செய்து கொடுக்கவில்லை என்றாலும் நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4) செண்ட் ரூ.33,500/- என நிர்ணயிக்கப்பட்ட தொகையை எதிரி, புகார்தராருக்கு கொடுக்கவில்லை என்றாலும் மனைப்பிரிவினை விற்பனை செய்த பிறகு, அதற்கான ஈவு தொகை மற்றும் வட்டியுடன் கொடுப்பதாக சொன்னார் என்றாலும் சரியல்ல, பணம் கொடுத்துதான் கிரையம் பெற்றார். எதிரி அவ்வாறு புகார்தாரருக்கு பணம் கொடுக்காததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**